

FREE EDITION

February - 2018

# ஜோதி

# Jothi Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 12 - 132

## ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

### அன்னையின் அருள்வாக்கு

---------------------------------

**சூழ்நில காரணமாக:**

“நேற்று வரை குழந்தையாக இருந்தபோது அன்பாக இருந்த பிள்ளை, இன்று வளர வளரக் கெட்ட பிள்ளையாக மாறுகிறான். அழுக்குடன், கிருமி சேரும்போது நோயாக மாறுகிறது. அதுபோலக் கெட்ட சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளுடன் நல்ல சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் சேரும்போது கெட்ட குணங்கள் உண்டாகின்றன.”

**எவன் மனிதன்?**

**“வாழ்க்கையில் அல்லல்பட்டும், இறப்பைப் பற்றித் தெரிந்திருந்தும் ஏழைகளுக்காக இருப்போம் எனவும், நல்லதற்காக இருப்போம் எனவும், தருமத்திற்காக இருப்போம் எனவும், அதருமத்தை அழிப்பதற்காக இறப்போம் எனவும் நினைப்பவன் எவனோ அவன்தான் மனிதன்.”**

## மருவத்தூர் மகிமை

**தோற்றுவாய்**

“உலகமே அறிவுச் சுடரான (சித்சொரூபிணியான) தேவியின், பிரதிபலிப்பேயாகும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் (சிவன்) கூட அழிவுக்குரியவர்கள். ஆனால் சக்தியோ நிலைத்து இருப்பவள்: அவள் ஆதியும் அந்தமும் இல்லாதவள்” என்று சக்தியின் பெருமை பேசப்படுகிறது.

சக்தி வழிபாடு எப்போது தோன்றியது? அன்னை சக்தி உலகிலுள்ள தொன்மையான மதங்கள் பலவற்றிற்கும் பொதுவானவள். சான்றாகப் பாபிலோனியாவின் மைலிட்டா (Milita) மதத்திலும், மெக்சிகோவின் ஈஷ் (Ish) மதத்திலும், ஆபிரிக்காவின் ஸலாம்போ (Salambo) மதத்திலும், எகிப்தின் பாஸ்ட் (Bast) மதத்திலும், அன்னைத்தெய்வ வழிபாடு பேசப்படுதலைக் கூறலாம் என்பர் அறிஞர்.

**மருவத்தூர்**

“உலகில் பூக்கள்தான் மணம் பரப்பும். ஆனால் விதிவிலக்காக மருவு, மருக்கொழுந்து எனும் இரண்டு மட்டும் தம் தலைகளாலும், கொழுந்தாலும் மணம் பரப்பும் தன்மையன. இதுபோல் உலகில் எல்லா ஆலயங்களும் தம் கருவறை மூர்த்திகளால் சிறப்புப் பெற - இம் மருவத்தூர் மட்டும் ஆலய எல்லையாலேயே கருவறை மூர்த்தத்தின் சிறப்பைப் பெற்று விடுகிறது. அம்மன் அருள்வாக்கில் ‘நீ என் ஆலய எல்லையை மிதித்து விட்டுப்போ’என அடிக்கடிக் கூறுவதும் இதனை வெளிப்படுத்துகிறது. இதனால் இவ்வூருக்கு இப்பெயர் வந்திருக்கவும் கூடும்.

**சக்தி புலவர் மா. சொக்கலிங்கம்** எம்.ஏ., பி.எட்.

**சித்தர்மண்**
தமிழ்நாட்டின் சிறப்புக்குரிய ஆலயங்கள் அனைத்தும் சித்தர்களோடு தொடர்புடையவை. பெரும்பாலும் அவை சித்தர் சமாதிப் பீடங்களாகவே இருக்கும். அல்லது சித்தர்கள் தங்கி வழிபட்டு அவைகட்கு மூர்த்திகரம் ஏற்றிய இடங்களாக இருக்கும். ஒரே சித்தர் பல இடங்களிலும் சமாதி பெற்றதாக வருவதும் உண்டு. உதாரணமாகப் பழநியில் போகர் சமாதி உள்ளது. அதுபோல் திருக்கழுக்குன்றத்திலும் போகர் சமாதி உள்ளதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இச்சமாதிகள் கருவறையிலும் அல்லது ஆலய எல்லையிலும் அமைக்கப்படுவது வழக்கம்.

| ஊர்கள் | சித்தர்கள் |
|---|---|
| திருப்பதி | கொங்கணவர் |
| கோடிக்கரை | கொங்கண வர்க்கம் (கொங்கணவரின் சீடர்கள்) |

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“ஆன்மாவை அடக்கினால் அனைத்தையும் அடக்கலாம்”.**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


**மருவத்தூர் மகிமை**
Page: 1 – 4

**மழையின்றி வாடிய மக்காச்சோளம்**
Page: 5 - 8

UPCOMING EVENTS

Melbourne: 10, 11, 15
Sydney: 5, 8

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 13

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 10 - 11

**Divine Miracles**
Page: 9

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 12

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


## மருவத்தூர் மகிமை ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

| | |
|---|---|
| திருவண்ணாமலை | இடைக்காடர், கௌதமர் |
| பொய்கை நல்லூர் (வடக்கு) | கோரக்கர் (நவகோடிச் சித்தர்கணத் தலைவர்) |
| நாகப்பட்டினம் | அழுகணிச்சித்தர் |
| எட்டுக்குடி (எட்டுகுடி) | வான்மீகர் |
| அழகர்மலை | இராமதேவர் (இவரே யாகூப் எனும் பெயரிலும் குறிப்பிடுகிறார்) |
| வைத்தீசுவரன் கோயில் | தன்வந்திரி, வசிட்டர் |

இவைபோல் சில இடங்களில் சித்தர்கள் கூட்டமாகவே இருந்து அருள் பாலிப்பதும் உண்டு.

| ஊர்கள் | சித்தர்கள் கணம் |
|---|---|
| கோடிக்கரை | கொங்கணவர்க்கச் சித்தர்கணம் |
| வள்ளிமலை | வள்ளிமலைச் சித்தர்கணம் |
| திருச்செந்தூர் | பஞ்சலிங்கச் சித்தர்கணம் |
| நெடுங்குன்றம் | மூலவர்க்கச் சித்தர்கணம் |
| சிதம்பரம் | மூலநாதச் சித்தர்கணம் |
| சதாசிவகோனை | நவநாதச் சித்தர்கணம் |
| கொல்லிமலை | எழுவர் சித்தர்கணம் |
| நர்மதை நதிக்கரை | நவகோடிச் சித்தர்கணம் |
| பர்வதமலை | பர்வதமலைச் சித்தர்கணம் |
| மருவத்தூர் | மருவத்தூர் சித்தர்கணம் (21 சித்தர்கள்) |

### அதிக அருள் எழுச்சி

சில ஆண்டுகளுக்கு முன் உபாசனை பலம் பொருந்திய பெரியவர் ஒருவர் ஆலயத்திற்கு வந்தார். ஆலயப் பகுதியையும், அங்கிருந்து பார்த்தால் தெற்கேத் தெரியும் அச்சிறுபாக்கம் மலையையும் மாறிப்மாறிப் பார்த்து 'இங்கே இவ்வளவு போக்குவரத்தா?' என்று குறிப்பிட்டார். அதிசயித்தார். சித்தர்மலை என்றும், 'சஞ்சீவிமலை' என்றும் அழைக்கப்படும் அச்சிறுபாக்கம் மலையில் இன்றும் சித்தர் நடமாட்டம் இருப்பதாகக் கூறுவர். இம்மலையின் தென் கோடியில் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற பெரும்பேறு முருகன் ஆலயமும், வடகோடியில் சித்தர்களால் வழிபடப்பெறும் விநாயகர் ஆலயமும் உள்ளது. மலையில் வடமேற்குத் திசையாகச் சுனை ஒன்றும், கன்னிக் கோயில் ஒன்றும், இஸ்லாமியர் சமாதி ஒன்றும் உள்ளது. இம் மலைப்பகுதியில் அகத்திய முனிவர், தும்பி முனிவர், சுகர் முனிவர் புற்றுக்கள் இருப்பதாகக் கூறுவர். இம்மலையின் தென் கோடியில் அச்சிறுபாக்கம் இளங்கிளி உடனுறை ஆட்சீசுவரர் வந்து ஆண்டுதோறும் அகத்தியருக்குக் காட்சி தரும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த மலையிலிருந்தும் அடிக்கடிச் சித்தர்கள் மருவத்தூர் மண்ணிற்கு வந்து கொண்டிருக்கின்றனர். இதைக் குறித்தே அப்பெரியவர் 'இங்கே இவ்வளவு போக்குவரத்தா?' என்று குறிப்பிட்டார்.

### ஆலயம்

2007 ஆண்டுகட்கு முன்பு தற்போதுள்ள இடத்தில் தலபுராணத்தோடு கூடியதும், கந்தர்வனால் வழிபடப் பெற்றதும், மச்சபுராணத்தில் குறிக்கப் பெற்றதுமான பழைய ஆலயம் இருந்தது. அதில் உள்ள சுயம்பு மூர்த்தமே தற்போது கருவறையில் உள்ளது. கால வெள்ளத்தில் பழைய ஆலயம் அழியச் சுயம்புவைப் புற்று மூடி - புதர் சூழ்ந்தது. புதரில் பால் வடியும் வேப்பமரம் ஒன்று இருந்தது. அதன் பாலைக் குடித்தவர்கள் இவ்வூரில் பலர் இன்றும் உள்ளனர்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## மருவத்தூர் மகிமை...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

1966 புயலால் மரம் வீழப் புற்று சிதைந்து சுயம்பு வெளிப்பட்டது. புற்றிலிருந்து பல ஆண்டுகளாக அடிகளாருக்கு நாகக் காட்சி கிடைத்து வந்தது. பிறகு அடிகளாருக்கு அருள் நிலை கூடி அருள் வாக்குக் கூறும் நிலை உருவாகியது.

ஆலயத்திலிருந்து 27 மைல்கள் கிழக்கே கடலில் விளம்பூருக்கும் கடப்பாக்கத்திற்கும் இடையே இதன் தொடர்புடைய ஆலயம் உள்ளது. அதன் மூன்றில் ஒரு பகுதி இன்றும் எஞ்சியுள்ளது. இது அம்மன் அருள்வாக்கில் வந்த உண்மை.

**எல்லை மகிமை**

தஞ்சை நகரத்தை முதலில் அமைத்த விசயாலய சோழன், நகரின் நான்கு எல்லைகளிலும் நான்கு சக்தி ஆலயங்களை அமைத்தான். அவற்றின் கிழக்கு எல்லையில் இருப்பதே தஞ்சை மாரியம்மன் கோயில். அந்த ஊர் புன்னைவனநல்லூர் என்னும் ஊர். அத்துடன் அரண்மனையின் நான்கு எல்லைகளிலும் நான்கு சக்தி ஆலயங்களை அமைத்தான். இதுபோல் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டின் பல நகரங்கட்கும் இவ்வமைப்பு இருந்திருக்கலாம். சில ஊர்கட்கும் இவ்வமைப்புகள் உண்டு. அங்ஙனம் அமைந்த ஊர்கள் பல சிறப்புக்களுக்கும் காரணமாகின்றன. அவற்றுள் ஒன்றே இம்மருவத்தூர். மருவத்தூரின் வட எல்லையில் காளி கோயிலும், தெற்கில் துர்க்கையும், கிழக்கில் ஐந்தூர் அம்மனும், மேற்கில் இரேணுகா பரமேஸ்வரி கோயிலும் அமைந்துள்ளன. நடுவில் அன்னை ஆதிபராசக்தி ஆலயம் அமைந்துள்ளது. இங்ஙனம் நான்கு எல்லைகளிலும் சக்திகளின் காவல் அமைந்து இருப்பது சிறப்புக்குரியதே!

**ஆன்மிகம் விளங்கவே அன்னை**

இக்கலியுகத்தில் மக்களின் துயர் தீர்க்கவும், இறையுண்மையை நிலைநாட்டி நாத்திகத்தை ஒடுக்கவும், அன்னை இங்கே அவதாரமாகியுள்ளாள்.ஆகவே இங்கே அன்னை, பேசும் தெய்வமாகவும், சித்தாடும் வல்லியாகவும், நடமாடும் சக்தியாகவும் உள்ளாள். இங்கே தீராத நோய்கள் தீர்கின்றன. அருள்வாக்கு மூலம் உண்மைகள் பல அறிவிக்கப்படுகின்றன. முற்பிறவி முடிச்சுக்கள் அவிழ்க்கப்படுகின்றன, ஆலய எல்லையை மிதித்ததுமே அருள்நிலை நம் உடலை ஆட்கொண்டு மனக்கவலை தீர்ந்து இனம்புரியாத அமைதி கிட்டுகிறது. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இத்தாய் இங்கே ஆன்மிகம் காக்கவே உள்ளாள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். காரணம் இன்றைய சூழ்நிலையில் சாதி-மத-இன-மொழி வேற்றுமைகளைத் தவிர்த்து 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனும் உண்மையை நிலைநாட்ட, 'ஒரே குலம், ஒரே தாய்' எனும் தாரக மந்திரம் தேவைப்படுகிறது. வேறு எந்தக் குறி மேடைகளிலும் இல்லாத அளவில் இங்கேதான் ஆன்மிகம் பற்றியும் அருள்வாக்கு கூறப்படுகிறது. சில ஆண்டுகட்கு முன் ஆன்மிக உண்மைகளைக் கூறப்புகுந்த அன்னை, இன்று ஆன்மிகத்தைச் செயற்படுத்த முற்பட்டுள்ளாள், உலக மக்கள் அனைவரும் ஆன்மிகம் பற்றிப் புரிந்து கொள்ள ஆன்மிக மாநாடுகள் பலவற்றை நடத்த முற்பட்டுள்ளாள்.

இத்துடன் அமையாமல், வழிபாட்டு மன்றங்களை உலகம் முழுதும் ஏற்படுத்தி – அதன் மூலம் 'இது சக்தியுகம்' என உலக மக்கட்கு உணர்த்தவும் முற்பட்டுள்ளாள். சில ஆண்டுகட்கு முன் தன் செவ்வாடைத் தொண்டர்களின் ஊர்வலத்தைப் பக்தி ஊர்வலமாக அமைத்த அன்னை, இன்று அதை ஆன்மிக ஊர்வலமாக ஆக்கிவிட்டாள். சொற்பொழிவை 'ஆன்மிகச் சொற்பொழிவு' என்று மாற்றியுள்ளாள். இன்றைய உலக நல்லறிஞர் பலரையும் ஆன்மிகம் பற்றிச் சிந்திக்கவும் வைத்துள்ளாள்.

இந்த உண்மையைக் கவிஞர் ஒருவர், 'பார்க்கின்ற திசை எல்லாம் தாயின் காலடி தென்படுவதாகவும், அதன் சிலம்போசை, அன்னையின் குங்குமக் கச்சு, அணிகலன்கள், அருள் ஊட்டும் விழிமலர்கள், மெல்லிய நூலுக்கும் இளைத்த இடை, முத்தாரம், தாமரை மொட்டு, சின்முத்திரைக்கோலம், அமர்ந்துள்ள தாமரைப்பீடம் அனைத்துமே ஒன்று சேர்ந்து ஆன்மிக ஒளியை உலகிற்கு உணர்த்துகின்றன' என்று கூறுகிறார். அதனால்தான் தன்னால் அன்னையின் அழகை விரித்துச் சொல்ல முடியவில்லை என்கிறார்.

இதோ பாடல்

"பார்க்கின்ற திசைதோறும் பண்ணார் திருவடியும்,
பயன்காணப் படிந்திட்ட சிலம்போ சையும்,
பார்வைக்கும் எட்டாமல் தேவைக்கும் ஒட்டாமல்
நூலுக்கும் இளைத்திட்ட நுண்ணி டையும்,
வார்க்குங்கு மக்கச்சும் வற்றாத கருணை மழை
வழி நின்றே வடிந்திட்ட கறுத்த விழியும்,
வயிரமொடு நவமணி வயங்குபல் லாரங்கள்
வளர்ந்தழகில் வடிந்திட்டே தொங்கும் அழகும்,
சீர்கொண்ட வலக்கையில் செந்தா மரை மொட்டும்,
திருவோங்கு கனியிதழில் ஒளிமு றுவலும்,
சேர்ந்திட்ட சின்முத்திரைத் திருக்கோலம் அமர்ந்தருளச்
சேர்ந்தோங்கிச் சிறந்துள செந்தா மரைப் பீடமும்
வார்கொண்ட கச்சின்மேல் வனப்போங்கு முத்தார
வயங்கொளியும் பயன்கனிய உலக மேழும்
வேர்கொண்டு ஆன்மிக விளைவுதர உந்திவிடும்
விளங்கழகைக் கவிதையினால் விரிக்கப் போமோ?

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

## மருவத்தூர் மகிமை...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

**அடிகளார்**

சக்தி உபாசகர் அருள்திரு பங்காரு அடிகளார் அவர்கள் தன் முன் வினைப் பயனாலும், விட்டகுறை தொட்ட குறையாலும் அன்னையின் முழு அருளைப் பெற்ற புனிதராவார். இவருடைய நிலை, யோக ஞானப் பயிற்சியாலோ, குருவருளாலோ பெற்ற நிலையன்று. அன்னையே ஆட்கொண்ட நிலையாகும். இலட்சம் பேர்களின் ஒருவருக்குத்தான் இந்தச் சீரிய நிலை கிட்டும். அன்னை இவருடலை மையமாக்கிக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப் பிரவேசம்) மூலம் இங்கே செயற்கரிய செயலைச் செய்கிறாள்.

ஆலயம் உள்ள இடத்தில் புற்றும் புதரும் மண்டியிருந்த காலத்திலேயே நாக உருவில் அன்னை இவருக்குப் பல முறை காட்சி தந்துள்ளாள். இதே இடத்தில் நாக வழிபாடு செய்யவும் இவரை ஆக்கியுள்ளாள். இவர் சிறு குழந்தையாய் இருந்தபோதே, மூன்று முறை இவர் உடலில் இத்தாய் நாக உருவில் ஊர்ந்து சென்று காட்சியும் உண்டு. இவர் வீட்டின் மாட்டுக் கொட்டிலிலேயே அன்னை ஆரம்ப நாளில் இவருக்குக் காவலாகவும் இருந்திருக்கிறாள்.

அது அன்னையின் அருள்வாக்கு உண்மை. இவருக்க அருள் நிலை கூடவேண்டி இளமையிலேயே இவரை ஆட்கொண்டு மனித உருத்தாங்கி அருள் நீரும் தந்துள்ளாள். இவருக்கு ஆன்மிக உண்மைகள், விரத முறைகள் வழிபாட்டு அமைப்புக்கள் அனைத்துமே அன்னை இவர் உள்ளிருந்தே உணர்த்திவிடுகின்றாள்.

இவருக்குச் சூக்கும உடல் இயக்கம் உண்டு. சில ஆண்டுகட்கு முன் விழுப்புரத்தின் பக்கம் உள்ள கரும்பூரில் பக்தர் ஒருவரின் திருமண இல்லத்திற்கு அன்னையருளால் சூக்கும உடலோடு சென்று வந்த காட்சி பலருக்கும் தெரிந்ததே! ஆடிப்பூர விழா நாள் ஒன்றில் இவர் ஆலய எல்லையில் இருந்த கட்டடத்தில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் போது - இவர் சூக்கும உடல் ஆலயத்தை வலம் வந்து – கருவறை முன் நின்று சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பக்தர்களின் சிறப்புகளையும் ஏற்றுள்ளது. இவை அனைத்தும் அன்னையின் அருளால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே ஆகும்.

இவருடைய கைகளில் வேல் ரேகையும், சூல ரேகையும் உள்ளன. எந்த நேரத்தில் இவருக்கு அருள்வரும் என்று கூற முடியாது. வெள்ளை வேட்டியுடனும், செருப்புக் காலோடும் இவர் சித்துக்கள் எப்போதும் ஆடும் நிலைக்கு அன்னையால் உயர்த்தப் பெற்றுள்ளார். வீட்டில் இவர் இருக்கும் போதும், ஆலயத்தில் என்ன நடக்கிறது என்று அறிந்து விடுவார். இவையனைத்தும் ‘அடிகளார் வேறு – அன்னை வேறு’ என்று கூறமுடியாத நிலைக்குச் சான்றாக விளங்குகின்றன. அடிகளாரின் இயல்புகளைக் கவிதையில் கூற வேண்டும் என்றால்,

“நடையிலும் பணிவே யுண்டு!
நல்லுரை நாளும் உண்டு!

உடையிலும் எளிமை யுண்டு!
உண்பதில் கூழும் உண்டு!

தடைவாராக் கொடையும் உண்டு!
தளிர்மனம் நீயே உண்டு!

தனிமையில் பூசை யுண்டு!
தாங்கிடும் கருணை யுண்டு!

விடைபெறப் பக்தர் வந்தால்
‘வணக்கமும்’ வாழ்த்தும் உண்டு!

விரிமனப் பொழிவில் கோயில்
வித்தகத் திரையும் உண்டு!

கடையிலும் கடையே பட்டார்
கண்டாலும் வரவேற் புண்டு!

கலியுக அவதா ரத்தின்
கண்கண்ட தவத்தோன் பாலன்!

**முடிவுரை:**

காலம் பகைத்தாலும் கண்ணருள் பகைக்காத அன்னையாம் இத்தேவியின் ஆலயம் - இக்கலியுகத்தில் நடமாடும் தெய்வம் உறையும் நல்லிடம்! சித்தாடும் பெருமாட்டி தவக்கொலுவிருந்து உலகத்துயர் போக்கும் உயர் இடம்! சாதி, மத, மொழி, இன பேதமின்றிப் ‘புதியதோர் உலகு படைக்கவுள்ள புனித பூமி! இப்பூமியின் அரசியாம் மருவத்தூர் மாதாவின் திருவடி பணிந்து பயனெல்லாம் துய்ப்போமாக!

**“உலகமெலாம் சக்தி நெறி ஓங்க வேண்டும்!**
**ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்!”**


- நன்றி: 1982 கோபி ஆன்மிக மாநாடு விழா மலர்

# Sydney - Mandrams - Upcoming Events – February 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



| | | | |
|---|---|---|---|
| 02.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 01.03.2018 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |

## மழையின்றி வாடிய மக்காச்சோளம்!

### அன்னையின் அருள்வாக்கு

“பயிர்த்தொழிலையே நம்பிக் கிராமங்கள் வாழ்கின்றன. மழை பெய்தால்தான் கிராமங்கள் செழிக்கும். விஷமங்கள் அதிகமானால் அழிவுகளும் அதிகமாகும்”.

“ஒவ்வொருவரும் தெய்வ பக்தியோடும் ஒருவருக்கொருவர் பாசத்தோடும் வாழ்ந்தால் பருவ மழை பெய்யும்”.

“மனிதனுடைய மன நிலையில் கர்வம் ஏறினால் மழைக்கும் கர்வம் ஏறும். அதுவே புயலாக அடித்து அழிக்கும்”. என்பது அன்னையின் அருள்வாக்கு.

### மஞ்சநாயக்கன்பட்டி

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டத்தில் மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் நம் ஆன்மிக குருவின் ஆசியுடன் மன்றம் நடத்தி வருகிறோம். “எதிர்ப்புகள் வரும், எதிர்ப்புகளுக்கிடையே ஆன்மிகம் வளர்த்து வா!” என்ற அருளாணைப்படி 1984ஆம் ஆண்டு வார வழிபாட்டு மன்றம் தொடங்கி (பதிவு எண்.1224) வழிபாட்டுடன் முடிந்தளவு அன்னதானமும் ஆடைதானமும் செய்து வருகின்றோம்.

**சக்தி கருப்பசாமி - பழனி**

### வானம் பார்த்த பூமி – வாடி வதங்கிய மக்காச்சோளம்

எங்கள் மன்றம் இருக்கும் பகுதி கரிசல் மண் சார்ந்த வானம் பார்த்த பூமியாகும். பருவ மழையை நம்பியே ஒரு போகம் அதிகமாக மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

வருடத்திற்கு நான்கு கோடி ரூபாய் முதல் ஐந்து கோடி ரூபாய் வரையில் மக்காச்சோளம் இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. இந்தப் பயிர்தான் எங்களுக்கு வருமானம் தருகிறது.

சென்ற வெகுதான்ய ஆண்டின் முற்பகுதியில் ஆடி ஆவணியில் பெய்த மழையை நம்பி மக்காச்சோளம், பருத்தி போன்றவை பயிர்செய்யப்பட்டது. நன்றாக முளைத்து வளர்ந்து நடுத்தர வயது வந்த நேரத்தில் புரட்டாசி மாதம் தொடங்கும் பருவ மழை தொடராமல் போய்விட்டது.

இன்றாவது மழை வருமா? நாளை வருமா…? என்று எம் மக்கள் வானம் பார்த்து நாளைக் கடத்தினர்.

மழை பெய்வதற்கான அறிகுறிகளே இல்லை. வானம் வெறிச்சென்று காட்சி அளித்தது. பகலிலோ வெயிலின் கடுமை அதிகமாகி மக்காச்சோளப்பயிர்கள் எல்லாம் வாடி வளர்ச்சி குறையத் தொடங்கின. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகியும் மழை மட்டும் இல்லை.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

# மழையின்றி...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

## இனி ஆண்டவனால் கூடக் காப்பாற்ற முடியாது

பருவமழை பொய்த்துவிட்டதைக் கண்ட எமது மக்கள் ஏமாற்றமடைந்து மனம் சலித்துப்போய் "இனி ஆண்டவன் வந்தால் கூடக் காப்பாற்ற முடியாது" என்று விவசாயிகளே விரக்தியுடன் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஒரு சொட்டு மழைகூட இல்லாமல் பயிர்களெல்லாம் வாடி வதங்கிச் சிறுத்துவிட்டன.

## வேள்வி செய்யலாமா..!

இந்நிலையில் மழை வேண்டி மன்றத்தில் வேள்வி செய்தாலாவது மழை பெய்யுமா என ஆலோசித்து, அம்மாவிடம் உத்தரவு கேட்டுச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்து, நானும் என் துணைவியும் 30.10.1998 அன்று மாலை பழனியில் இருந்து மேல்மருவத்தூர் புறப்பட்டோம். அன்றுவரை இப்பகுதியில் மழையில்லை. கண்மாயில் ஒரு சொட்டுத் தண்ணீர் கிடையாது.

## அம்மாவின் தரிசனம்

அதிகாலை கருவறையில் அம்மா தரிசனம் முடிந்து அருட்கூடத்தில் குரு தரிசனம் பெறக் காத்திருந்தோம்.

1.11.1998 ஞாயிறு அன்று நம் அம்மாவை அருட்கூடத்தில் தரிசித்துப் பாதபூசை செய்தோம். பாதபூசை செய்யச் செய்ய அம்மா திருவாய் மலர்ந்தருளினார்கள்.

"தொடர்ந்து சக்திமாலை போட்டுக்கிட்டு வரணும்" என்றார்கள்.

"அம்மா! எங்கள் பழனி பகுதியில் மழையே இல்லை. மக்காச்சோளம்தான் எங்கள் வருமானம். எல்லாம் போய்விட்டது. மன்றத்தில் வேள்வி நடத்தணும். அதற்கு அம்மா உத்தரவு கொடுக்கணும்மா..!" என்றேன்.

## நான் வருகிறேன்

"என்ன செய்யறது? மக்களுக்கு வழிபாட்டில் ஆர்வமில்லே.. பழனி பகுதியில் வழிபாடும் குறைந்து விட்டது. அந்தப் பகுதியில் இருந்த செட்டியார்கள் பலபேர் தொழில் தேடி வேறுபக்கம் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். கன்னியாகுமரி பகுதியில் மழையில்லாமல் கிடந்தது. அம்மா சென்றுவந்த பிறகு ஒரே வெள்ளக்காடாக இருக்குது.

**பழனி எந்தப்பகுதி? திண்டுக்கல் பகுதிதானே? சரி! நான் வருகிறேன். நீங்கள் செல்லும் போதே மழை பெய்யும். மன்றங்களில் மழை வேண்டல் படித்து வாருங்கள். சிறிய அளவிலாவது அன்னதானம் செய்து வாருங்கள்!"** என்றார்கள்.

என் துணைவியாரைப் பார்த்து "கருவறை சென்று கனி வைத்து எடுத்துச் சென்று வழிபட்டு வா! உனக்காகவாவது மழை பெய்யட்டும்! வியாழன் ஞாயிறு ஆகிய தினங்களில் ஒரு நாள் வேள்விக்கு ஏற்பாடு செய்துகொள்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

## வாய்மொழி உத்தரவுக்கே இந்த சக்தி!

அம்மாவின் அருளாசியைப் பெற்ற மனநிறைவோடு அன்று மாலை மேல்மருவத்தூர் விட்டுப் புறப்பட்டோம்.

என்ன ஆச்சரியம்! புறப்படும்போதே அன்னை மழையைக் கொடுத்தாள். தொடர்ந்து திருச்சி, திண்டுக்கல் வரை மழை பெய்து கொண்டே இருந்தது.

இரவு 1.30 மணியளவில் திண்டுக்கல், பழனி பிரதான சாலையில் உள்ள எங்கள் ஊர்ப்பிரிவில் இறங்கினோம். அம்மாவின் ஆசிப்படி எங்கள் ஊரில் இறங்கும்போதே மழை பெய்து கொண்டுதானிருந்தது.

## வானொலியில் வந்த செய்திகள்

2.11.1998 காலை 6.45 மாநிலச் செய்தியில் தமிழ்நாட்டில் அடுத்த 12 மணி நேரத்திற்கு மழை பெய்யும் என்று வானொலியில் அறிவிப்பு வந்தது.

03.11.1998 காலை 6.45 மணி அடுத்த 36 மணி நேரத்திற்கு மழை பெய்யும் என்ற அறிவிப்பு வந்தது. மழையும் தொடர்ந்து பெய்தது.

(தொடர்ச்சி...7ஆம் பக்கம்)

# மழையின்றி…

(6ஆம் பக்க தொடர்ச்சி)

4.11.1998 காலை 6.45 மணி அடுத்த 48 மணி நேரத்திற்கு மழை பெய்யும் என்ற அறிவிப்பு. அதே போல் இரவு பகலாக மழை!
எல்லாமே அம்மாவின் வாய்மொழி உத்தரவு பெற்ற பிறகு நடந்தவை.

திண்டுக்கல் பகுதிக்கு நான் வருகிறேன் என்று அம்மா சொன்னதே..! ஆன்மிகப் பயணமாக வரும்போல இருக்கிறது என்றுதான் நினைத்தோம். மழையாக வருவேன் என்ற அர்த்தத்தில் அப்படிச் சொல்லியிருக்கிறது என்பதை இப்போது உணர்ந்தோம்.

‘ஓம் மழையென வருவாய் போற்றி ஓம்!
ஓம் காராக வருவாய் போற்றி ஓம்!’

என்ற மந்திர வரிகளின் அர்த்தம் அப்போதுதான் புலப்பட்டது.

## தினமலர்ச் செய்தி

திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீராக வரும் ஆத்தூர் நீர்த்தேக்கம் நிறைந்து வழிவதாக தினமலர் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

மேலும் திண்டுக்கல், பழனி பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்கள், கண்மாய்களின் கொள்ளளவு, நீர்வரத்து ஆகியவை பற்றியும் பட்டியலிட்டு வெளியிட்டது. பழனி பகுதியில் நீர்த்தேக்கங்கள் நிறையாமல் உள்ளதையும் செய்தியாக வெளியிட்டது.

## கனியை எடுத்துச்சென்று வழிபட்டு வா!

“கருவறையில் கனி எடுத்துச் சென்று வழிபட்டு வா!” என்று அம்மா உத்தரவிட்டிருந்தாள் அல்லவா? அதன்படி மூன்று கனிகள் வைத்து எடுத்து வந்திருந்தோம். 6.11.1998 வரை அந்தக் கனிகளை வீட்டில் அம்மா படத்தின் முன் வைத்து அடியேன் தீபராதனை செய்து வழிபட்டு வந்தேன்.

## கனி வழிபாடு

என் துணைவியார் வழிபாடு செய்துவர வேண்டும் என்பதுதானே அம்மா உத்தரவு? என் துணைவியாரைப் பார்த்து “அம்மா உன்னைத்தானே வழிபாடு செய்யும்படி சொல்லிற்று? இன்று முதல் நீயே வழிபாடு செய்!” என்றேன்.

இரவு 10.00 மணியளவில் அந்தக் கனிகளுக்குத் தீபாராதனை செய்து என் துணைவி திருஷ்டி கழித்தார்.

அம்மா அருள் வெள்ளம் அதன்பின் மழையாகப் பெருக்கெடுத்து ஓடிக் கன மழையாக வெளிப்பட்டது.

இந்த ஆண்டிலே இதுவரை பெய்யாத மழையைக் கொட்டோ கொட்டென்று கொட்டியது.
இரவு முழுவதும் கனமழையாகப் பெய்து கண்மாய்கள் நீர்த்தேக்கங்கள் அனைத்தையும் நிரம்பச் செய்து காசினியைக் குளிரச் செய்துவிட்டாள் நம் அன்னை.

(தொடர்ச்சி..8ஆம் பக்கம்)

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்

www.adhiparasakthi.co.uk

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
ஆதிபராசக்தி இணையத்தளம்

“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை
www.adhiparasakthi.co.uk என்ற
இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# Sydney - Mandrams - Upcoming Events – February 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 02.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 01.03.2018 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>“பௌர்ணமி விளக்குப் பூஜை” |

# மழையின்றி…

(7ஆம் பக்க தொடர்ச்சி)

## தினகரன் செய்தி

திண்டுக்கல் பகுதி மட்டுமல்லாமல் பழனி பகுதியில் அனைத்துக் கண்மாய்களும் நிரம்பி வழிந்தன. 11.11.1998 – தினகரன் மதுரைப் பகுதி பத்திரிகை முன்பக்கச் செய்தியாக “10 நாள் மழை! ஆற்றில் வெள்ளப் பெருக்கு!” என்று வெளியிட்டிருந்தது.

## விரக்தி மகிழ்ச்சியானது

ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என விரக்தியின் விளிம்பில் நின்று விவசாயிகளே கூறினார்களல்லவா? “சார்! குழிக்கு (60 சென்ட்) 10 மூட்டை மக்காச்சோளம் வந்துவிடும்!” என்று நம்பிக்கையுடன் பேசுமாறு விவசாயிகளை மகிழ வைத்துவிட்டாள் நம் அன்னை.

## அம்மா சொல்லியது

“இன்றைக்கு வெளிநாடுகளில் எல்லாம் நம் அம்மா பேர் பரவிடுச்சு! எல்லாத்துக்கும் நம் மகளிர்தான் காரணம்!” என்று அம்மா குறிப்பிட்டாள்.

“மகளிர் ஆன்மிக ஈடுபாட்டுடன் வழிபாடு செய்யச் செய்ய அந்தப் பகுதி சுபிட்சமடையும்!” என்கிறாள் அன்னை.

## விஷமத்தனமான விமர்சனங்கள்

அரசாங்கம் அணை கட்டலாம், கண்மாய்கள் அமைக்கலாம், தூர் வாரி வழி வகுக்கலாம், மழை பெய்ய வைப்பது யார் கையிலும் இல்லை! மழை பெய்ய வைப்பது அந்தப் பரம்பொருள் கையிலிருக்கிறது. அந்தப் பரம்பொருளின் தயவு பெற வழிபாடு தேவை! கிராமந்தோறும் மன்ற வழிபாடு முறைப்படி நடந்தால் தமிழ்நாட்டுக் கிராமங்கள் சுபிட்சமடையும்.

அதை மறந்து விஷமத்தனமான விமர்சனங்கள் செய்தால் மழைக்கும் கர்வம் பிடிக்கும். புயலாக அடிக்கும்.

மனநிலை போல மன்றநிலை! மன்றநிலை போல பக்தி நிலை! பக்திநிலை போல் மழை நிலை!
- என்ற அம்மாவின் அருள்வாக்கு ஆழம் நிறைந்தது.

## கிராமங்கள் சுபீட்சம் அடைய..

தமிழ்நாட்டுக் கிராம மக்கள் அரசியல் மோகம், சினிமா மோகம் ஆகியவற்றை உதறித் தள்ளிவிட்டுத் தெய்வ மோகம் பிடித்து வழிபாட்டில் கவனம் செலுத்தினால் கிராமங்கள் தழைக்கும். செழிக்கும்! வாழ்வதற்கு வழி கிட்டும்!

ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள் இதனை உணர்ந்து கிராம மக்களை ஈர்த்து அம்மாவிடமும் ஆன்மிகப் பாதைக்கும் கொண்டுவர வேண்டும்.

ஓம் சக்தி!

# Divine Miracles at Melmaruvathur

## Vallalar and Adigalar:

In 1996 the Thai Poosam was being celebrated at Siddha Peetam in a big way. Spiritual discourses were going on. Several speakers described their experiences with Mother. Among them was Kasi Villavan from Puducherry. This is what he said: In my earlier days I was a devotee of Vallalar. I had no faith in religions or in mythology. Only the Siddha path appealed to me. All sages of the world agree on one thing, which is that effulgence is the nature of God. "Arul Perum jyothi Agaval" of Vallalar had great influence on me and explained many things to my satisfaction. When I read the 108 verses of Mother, I found a lot of similarity with Vallalar's work. I came to Mother seeking answers to my questions. She has satisfied my thirst. According to Her command, some things can be disclosed while others are not to be talked about. I asked in what way Vallalar's teachings differed from Adigalar's. Mother asked, "Where was Vallalar born?" I replied that he was born at Marudhur. Then She asked, "Where was Adigalar born?" I replied that he was born at Maruvathur. She then asked, "Is there any connection between these two places?"

I then asked if there was any connection between Vallalar's work and Adigalar's teachings. Mother said, "Son! I disclosed all the spiritual secrets through Vallalar. Today I have given you my son, who is equally knowledgeable. Let the common people worship and progress. There were few takers for Vallalar's teachings but my son has adapted his teachings according to the needs of society. Let people take whichever path suits them". Although I was influenced by Vallalar, I felt like a spiritual orphan. It was the Mother who drew me to Her and said that Her son would be my Guru and lead me on my spiritual journey. My dear fellow Sakthis! We were all spiritual prphans before Adigalar, who took us under his wing and guided us. Mother has never denied any devotee hiss or her just requests.

Once Adigala's birthday was approaching. I prayed to Mother that I should have the satisfaction of placing a flower at the sacred feet of my Guru and I needed Her blessings for this. Finally it was Adigalar's birthday. He was being brought to the Peetam from his house in a procession. The crowds were enormous. Yet Adigalar created an instant for me and that was enough for me to place the flower at his feet and feel satisfied. A jyothi is lit here during Thai Posam. At Vadalur, Vallalaralso lit a jyothi. "What is the significance of these jyothis?". I raised this question before Mother. She replied, "Son! There are thirteen types of jyothis, like vama, soma, vana, gnana, Maga, Yoga, vadha, nadha, Aema, vyoma, enu, veenu and eka jyothis. The one that this boy lights here is the eka jyothi".

Mother is at the core of the universe and dwells in all life forms. She burns here as eka jyothi for all of us to understand this truth. When I meditate sitting here I see Vallalar and when I meditate at Vadalur I seeAdigalar. What is its significance? In spiritual matters there are many subtle points, which only the enlightened souls can discern. What the ordinary souls cannot be expected to understand are kept secret. Only the siddhas know these secrets. I was asked to speak on Thai Poosam day. I asked Mother what I should speak on. Mother said, "The world has not understood the greatnes and worth of this boy. He is capable of even restoring life." I want every one to realize that Adigalar has come to guide people like us who are spiritual orphans and take us to higher levels".

***

## ஆன்மா ஆட்டுவிக்கிறபடியே நடக்கும்

"அந்த ஜாதகம், இந்த பரிகாரம் என்று அலைவதால் உன்னுடைய பிரச்சனை தீர்ந்துவிடாது. அழிவது அழிந்து கொண்டுதான் இருக்கும். பொறாமைப்படுபவன் பொறாமைப்பட்டுக் கொண்டே இருப்பான். சிறைக்குச் செல்பவன் சிறைக்குச் சென்று கொண்டுதான் இப்பான். அவனவன் ஆன்மா எப்படி ஆட்டுவிக்கிறதோ அதன்படிதான் நடக்கும்."

- அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – February 2018

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170
(Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 04.02.2018 | Sunday | 09.00a.m.<br>03.00p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

## அருள்வாக்கும் அனுபவங்களும்

# உடுக்கைப் பாட்டிற்கும் உவப்பாள்

**"சாம** கானப் பிரியை" என்பது தேவியின் மந்திரங்களில் ஒன்று. சாமவேதம் என்பது நான்கு வேதங்களில் ஒன்று. அந்தக் காலத்தில் வேள்விப்பூசை நடக்கும்போது, சாம வேதங்களில் உள்ள இன்னிசை கீதங்களைப் பாடுவர். சாமவேதம் இன்னிசை கீதங்களின் திரட்டு. அன்னை ஆதிபராசக்தி, வேத மந்திர கோஷங்களை மட்டும் கேட்டுத்தான் ஆனந்தப்படுவாளா..? பாமரன் பாடுகின்ற உடுக்கைப் பாட்டையும் உவந்து ஏற்கிறாள். ஆம்! அந்த உடுக்கைப் பாட்டையும் கேட்டு உவப்படைபவள் என்பதனை உணர்த்துகிற நிகழ்ச்சி ஒன்று நம் சித்தர்பீடத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நாட்களில் நம் ஆலயத்தில் ஆடிப்பூரம் மிக எளிமையாக நடைபெற்றது. அவ்விழாவில உடுக்கை, பம்பைப்பாட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உடுக்கைப் பாட்டுக்காரர் கருவறையின் முன்பு நின்றபடி, அன்னையின் பெருமையையும், புகழையும் வர்ணித்துப் பாடியவாறு இருந்தார். அந்த வேளையில் அடிகளார் அவர்கள் கருவறைக்குள் வந்து நின்றார். அடிகளார் திருமேனியை வயமாக்கிக்கொண்டு அன்னை வெளிப்பட்டு விட்டாள். "யோவ்! அம்மா வந்துவிட்டது. உடுக்கையை நிறுத்து" என்று சிலர் சத்தம் போட்டனர்.

கருவறையை விட்டு வெளியே வந்த அன்னை "ஏன் அவனை நிறுத்தச் சொன்னாய் மகனே! அவனை வாசிக்கச் சொல்!" என்று ஆணையிட்டு, வேப்பிலை ஏந்தியபடி நின்றாள்.

"யோவ்! அம்மா வாசிக்கச் சொல்லுது! வாசி!" என்று உடுக்கைக்காரரிடம் கூறினார் ஒருவர்.

அவ்வளவுதான்! உடுக்கைக்காரருக்கு உற்சாகம் பீறிட்டது. மீண்டும் பாடத் தொடங்கினார். அதுவரை அம்மா உடுக்கை இசைகேட்டு அப்படியே நின்றாள்.

ஏதோ உடுக்கைக்காரன் மனம் புண்படக்கூடாது என்பதற்காக அம்மா உடுக்கை வாசிக்கச் சொல்லியது என்று சிலர் நினைத்தார்கள்.

அப்போது ஒரு தொண்டருக்கு மட்டும் ஓர் அதிசயம் தெரிந்தது. அவர் அம்மாவின் பாதங்களைப் பார்த்தபடி இருந்தார். அம்மாவின் கால்விரல்கள் மட்டும், அந்த உடுக்கைப் பாட்டுக்கு ஏற்றவாறு நர்த்தனம் இட்டன.

அது உடுக்கைப் பாட்டிற்கு ஏற்றவாறு அமைந்த தாளமா? அல்லது நர்த்தனமா? அம்மாவின் மகிழ்ச்சி வெளிப்பாடா..? நமக்குத் தெரியாது!

(11ஆம் பக்க…தொடர்ச்சி)

## Melbourne - Mandrams – Upcoming Events –February 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**

Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 02.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.02.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.02.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 01.03.2018 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |

**Lalor**

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## உடுக்கைப் பாட்டிற்கும். . .

(10ஆம் பக்க தொடர்ச்சி)

“சார்! அம்மனுக்கு இந்த உடுக்கைப்பாட்டு பிடித்திருக்கும் போல இருக்கிறது சார்! அந்த உடுக்கைக்காரர் பாட்டிற்கு ஏற்றபடி அம்மாவின் கால் விரல்கள் மட்டும் அடியெடுத்து அசைந்தாடின சார்!” என்றார்.

அதன்பின்பு, விழாவின் மற்ற பணிகளை மேற்பார்வையிட்டு, விழாவை ஏற்று அருள்பாலிக்கும் வகையில் தொண்டர்கள் புடைசூழ மற்ற இடங்களுக்குச் சென்றாள் அன்னை.

அன்னை சாமகானத்திற்கும், வேதமந்திரங்களுக்கும் மட்டும்தானா மகிழ்கிறாள்?

தாளலயம் தவறாத – பாமர பக்தனின் உடுக்கைப் பாட்டுக்கும் மகிழ்கிறாள்.

ஏன்? அவளே ஒலி வடிவாக இருக்கும்போது பாட்டும் அவள்தான்! பாவனையும் அவள்தான்! நாதமும் அவள்தான்! கீதமும் அவள்தான்! ஏழு ஸ்வரங்களிலும் அவள்தான் ஆனந்த நடனம் புரிகிறாள்.

**“ஓம் பண்ணாக இசைந்தாய் போற்றி ஓம்!” என்பது அவள் மந்திரம்.**

**ஆன்மாவைச் சுத்தப்படுத்து**

“உங்கள் ஆன்மாவே உங்களுக்கு அழிவைத் தேடித்தரும்.
ஆன்மாவைச் சுத்தப்படுத்தத்தான் ஆன்மிகம்!”
-அன்னையின் அருள்வாக்கு

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



# ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

## ஆலய சிறப்பு விழாக்கள்

## 2018 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 17 | 01.03.2018 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மாசி | 19 | 03.03.2018 | சனி |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 78ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| பங்குனி | 03 | 17.03.2018 | சனி | அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 04 | 18.03.2018 | ஞாயிறு | தெலுங்கு வருடப்பிறப்பு |
| பங்குனி | 17 | 31.03.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| சித்திரை | 01 | 14.04.2018 | சனி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 02 | 15.04.2018 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 16 | 29.04.2018 | ஞாயிறு | சித்திரைப்பௌர்ணமி – வேள்வி பெருவிழா |
| வைகாசி | 01 | 15.05.2018 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 15 | 29.05.2018 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| வைகாசி | 30 | 13.06.2018 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 13 | 27.06.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 28 | 12.07.2018 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 11 | 27.07.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | அமாவாசை - வேள்வி |

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.



# திருமதி அம்மா பதில்கள்

- **திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்**

*அம்மா! எந்தப் பிறவியில் என்ன தவறு செய்தோம் என்று தெரியாமலே, இந்தப் பிறவியில் தண்டனை அனுபவித்து வருகிறோம். தவறு செய்தால் அம்மா அந்தப் பிறவியிலேயே, தாமதம் இல்லாமல் தண்டனை கொடுக்கலாம் அல்லவா? ஏன் இந்தத் தாமதம் என்று தெளிவு படுத்துவீர்களா அம்மா..?*

போன பிறவியில் செய்த தவறுகளுக்காகத்தான் இப்போது தண்டனை அனுபவிக்கிறீர்கள் என்று யார் சொன்னது உங்களுக்கு? நன்றாக யோசித்துப் பாருங்கள். இந்தப் பிறவியிலேயே உங்களையும் அறியாமல் ஏதாவது தவறு செய்திருப்பீர்கள். பாவ புண்ணியத்தைத் தவணை முறையில் அனுபவித்து ஆக வேண்டும். அதுதான் தெய்வ நியதி. நீங்கள் ஒருவரை இன்று அவமானப்படுத்தினால், அடுத்த நாள் நீங்கள் மற்றவரிடம் அவமானப்படுவீர்கள். கடல் அலைகள் கரையை அடையாமல் வந்து போய்க்கொண்டிருப்பது போலப் பிறவிதோறும் துன்பமும், இன்பமும் மாறி, மாறி வந்துகொண்டும், போய்க்கொண்டும்தான் இருக்கும். அதை யாராலும் மாற்ற முடியாது. அழுகிற குழந்தைக்குத் தாயின் மடி சிலநேரம் ஆறுதல் அளிப்பது போல, தெய்வ நம்பிக்கை சில நேரங்களில் நமக்கு மன ஆறுதலைக் கொடுக்கும். மறுபடியும் அந்தக் குழந்தை எதற்காவது அடம்பிடித்து அழுவதுபோல, நாமும் வாழ்க்கையில் எதிலாவது மாட்டிக்கொண்டு துன்பப்படத்தான் செய்வோம். எனக்குப் போன பிறவியின் துன்பத்தை அடுத்த பிறவியில் அனுபவிப்போம் என்பதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. இந்தப் பிறவியில் ஒழுங்காக வாழ வேண்டும். தவறு செய்தால், தவறை உணர்ந்து திருந்தி வாழ வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், தீங்கு செய்யக் கூடாது. இது தான் என் நம்பிக்கை.

*அம்மா! சக்தி பீடத்தில் தினசரி வழிபாடு செய்வதிலும் விழாக்களிலும் எனது பங்களிப்பு இருக்கும்படி அம்மா கருணை காட்டி உள்ளார்கள். அம்மாவின் கருணையை நிரந்தரமாகத் தக்க வைத்துக்கொள்ளவும், இப்படித் தொண்டு செய்கிறோம் என்கிற அகங்காரம் ஏறபடாமல் இருக்கவும் தயவு செய்து வழிகாட்டுங்கள்.*

கிடைத்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அகங்காரம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நீங்களே எழுதி இருக்கிறீர்கள். தொண்டு செய்தோம் என்ற திருப்தி மனத்திற்கு ஏற்பட வேண்டுமே தவிர தொண்டு செய்து விட்டோம் என்ற எண்ணம் வரக்கூடாது. தொடர்ந்து செய்ய அம்மா அருள் புரிய வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். “தான் என்ற எண்ணம் வரக்கூடாது. நாம் என்ற எண்ணம் வர வேண்டும்” என்று அம்மா கூறுவது போல மற்ற சக்திகளுடன் அன்பாகப் பழக வேண்டும். தான் என்ற எண்ணம் தலை தூக்கும்போது நீங்களே தட்டி அடக்கி விடுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

## ஆன்மா அழியாதது

“உங்கள் உடலை அழித்து மண்ணிட்டு மூடினாலும் கூட உங்கள் ஆன்மாவை அழிக்க முடியாது. உடல் காற்றால் இயங்கும் சக்தி உடையது.”

- அன்னையின் அருள்வாக்கு

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## கற்பூரமும் - விறகுக்கட்டையும்

“ஆண்டவனுக்குக் கற்பூரம் காட்டுகிறோம். அந்தக் கற்பூரம் எரிந்து போய்விடுகிறது. மிச்சம் மீதி எதுவும் இல்லை. ஆனால் விறகு இருக்கிறதே அந்த விறகை அடுப்பிலே வைத்து எரித்தால் பல பொருள்களை வேகவைக்கப்பயன்படுகிறது. எரிந்து போன பின் மிச்சம் மீதி உள்ள கரி அதன் பிறகும் பல வகையில் பயன்படுகிறது.

இந்த இரண்டில் நாம் எதுபோல இருக்க வேண்டும் சொல்லுங்கள்! கற்பூரம் போலவா? அடுப்புக்கரி போலவா?

கற்பூரம் எரிவது போல நீங்கள் சுயநலத்துடன் வாழ விரும்பாதீர்கள். அடுப்புக்கரிபோல வாழுங்கள்.

நீங்கள் வாழும்போது மற்றவர்கட்காக வாழ வேண்டும். விறகுக்கரிபோல, பின்னாலும் பல பயன்களுக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.”.

## ஓம் சக்தி விளக்கின் மகிமை

**சிறுமுகை வார வழிபாட்டு மன்றம்**
எங்கள் சிறுமுகை மகளிர் வார வழிபாட்டு மன்றத்தின் தலைவி சக்தி மணி தங்கவேல் அவர்கள், தன் இல்லத்தில் வெள்ளிக்கிழமை தோறும் காலையில் அன்னையின் படத்திற்குத் தன் இரு கரங்களால் வேப்பிலை மாலை அணிவித்து மந்திரம் கூறி வழிபடுவார்கள். மதியம் ஒரு மணிக்குள் அன்னை அந்த மாலையை வளர்த்திக் காட்டுவாள்.

அது ஆறு ஆடி வரையிலும் கூட நீண்டு வளர்ந்து தரையில் படர்ந்தபடியே போகும். இப்படித் தொடர்ந்து இரண்டு வருட காலமாக வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வந்தது. வளர்ந்த வேப்பிலை மாலைகளைப் பத்திரப்படுத்திச் சேகரித்து ஓடுகிற பவானி ஆற்றில் விட்டு விடுவார்கள்.

**சக்தி.ஆர்.மகமது இஸ்மாயில்** - கோவை

**இன்னொரு பெண்மணி வேண்டுதல்:**
அன்னையின் அந்தச் சித்தடலைப் பார்த்து மகிழ்ந்த அந்த மன்றத்தின் பொறுப்பாளர்களில் ஒருவர், தன் வீட்டிலும் அம்மா இவ்வாறு வேப்பிலை மாலை வளர்த்து அருள் பாலிக்க வேண்டும் என்று முறையிட்டார். அன்னையும் அவர் முறையீட்டுக்குச் செவி சாய்த்தாள்.

**வேள்வியில் வைக்கப்பட்ட ஓம் சக்தி விளக்கு வாங்கியது**
அது நடைபெற்ற பிறகு மன மகிழ்ச்சியடைந்த அந்தப் பெண்மணி. அன்னையின் அருள் தனக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றெண்ணி மருவத்தூர் வந்து, வேள்விப் பூசையில் வைக்கப்பட்ட ஓம் சக்தி விளக்கை வாங்கிக் கொண்டார்.

அன்று ஆன்மிக குருவின் பிறந்த நாள். விளக்கை வாங்கிக்கொண்டு குருவின் திருவடிகள் மட்டும் உள்ள படத்தையும் வாங்கிக்கொண்டு, அந்தப் பெண்மணி அன்னையின் கருவறையில் கொடுத்து அங்கேயே விளக்கேற்றி அணையாமல் ஏந்தியபடி அன்னையின் சந்நிதியை வலம் வந்தார்.
பிறகு, திருவிளக்கை வேனுக்கு (Van) கொண்டுபோய்க் குளிர வைத்துவிட்டு, அதனைப் பையில் வைத்தால் எண்ணெய் ஆகிவிடுமே என்றெண்ணி வேனின் முன் பகுதியில் அமர்ந்திருந்த கணவரிடம் கொடுத்து அவர் இருப்பிடத்தின் அடியில் வைத்துக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டார்.
அதே வேனில் எங்களுடன் வந்த இரண்டு மகளிர் சக்திகள், அன்னையின் காமாட்சி விளக்குகளை வாங்கி அவற்றைப் பத்திரமாகப் பயபக்தியோடு மடியில் வைத்துக்கொண்டு பயணம் செய்தார்கள்.

**காலால் விளக்கைத் தள்ளியது**
ஓம் சக்தி விளக்கைத் தன் இருக்கைக் கீழ் வைத்த அன்பர், அந்த விளக்கின் மகிமை பற்றி அதிகம் தெரியாதவர். புதிதாக அன்னையின் ஆலயத்திற்கு வந்தவர்.

எங்கள் வண்டி சித்தர்பீடத்தை விட்டுப் புறப்பட்டது. வண்டியில் அதிர்ச்சி காரணமாக அந்த விளக்கு உருண்டு வந்தபடியே இருந்தது. அந்த சமயங்களிளெல்லாம் தன் இரண்டு கால்களாலும் அந்த விளக்கைப் பின்னுக்குத் தள்ளியபடியே பயணம் வந்திருக்கிறார். திருவிளக்கைக் காலால் தள்ளக்கூடாது என்ற அடிப்படை விஷயம்கூட அவருக்குத் தெரியவில்லை.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events –February 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.02.2018 | Friday | தை | 20 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 04.02.2018 | Sunday | தை | 22 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 09.02.2018 | Friday | தை | 27 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.02.2018 | Sunday | தை | 29 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 16.02.2018 | Friday | மாசி | 04 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.02.2018 | Sunday | மாசி | 06 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 23.02.2018 | Friday | மாசி | 11 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.02.2018 | Sunday | மாசி | 13 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**15.02.2018 – வியாழன் - அமாவாசை, 01.03.2018 – வியாழன்- பௌர்ணமி**

## ஓம் சக்தி விளக்கின் ...

(14ஆம் பக்க தொடர்ச்சி)

**மாயமாய் மறைந்த விளக்கு:**

வண்டி அதிகாலை சிறுமுகை வந்து சேர்ந்தது. அனைவரும் இறங்கினார்கள்.வண்டியில் வைத்த அந்த ஓம் சக்தி விளக்கைத் தேடினார்கள். எங்கேயும் காணோம். அந்த விளக்கை வாங்கிய பெண்மணி அதிர்ச்சியால் மனம் கலங்கினார். எங்கே எப்போது அது வண்டியிலிருந்து விழுந்திருக்கும்..? யாருக்கும் தெரியாமல் மாயமாய் அது மறைந்தது எப்படி? யாருக்கும் புரியவில்லை. நாமே வாங்கி நம் மடியிலேயே வைத்துக்கொண்டு பயணம் வந்திருக்கலாமே..? இப்படிக் கணவர் பொறுப்பில்லாமல் நடந்துகொண்டாரே என்று வேதனை அடைந்தார் அந்தப் பெண்மணி.

**அந்த அன்பருக்கு நேர்ந்த கதி:**

தம் கால்களால் விளக்கை உதைத்துத் தள்ளியபடி பயணம் செய்த அந்த அன்பருக்கு நேரிட்ட துன்பக்கதை வருமாறு:
அந்த அன்பர் அடுத்த நாள் இரவு வேலைக்குச் சென்று காலை 6.00 மணி அளவில் தன் மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்தார். தொழிற்சாலையிலிருந்து மெயின் ரோடுக்குத் திரும்பியபொழுது எதிர்பாராமல் அங்கு வேகமாக வந்த லாரி ஒன்று அவர் மேல் வேகமாக மோதியது. கண்ணிமைக்கும் நேரத்தில் இவர் தூக்கி எறியப்பட்டார். ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் லாரியின் இரண்டு சக்கரங்களுக்கும் அடியில் சிக்கி நசுங்கியே விட்டது. சற்று இப்பக்கம் விழுந்திருந்தால் இவரும் நசுங்கிப் போயிருப்பார்.

சித்தர் பீடம் வந்து ஆன்மிக குருவின் ஆசி பெற்றுத் திரும்பியதால் அவரை அன்னை காப்பாற்றியிருக்கிறாள்.
அந்த விபத்தைப் பார்த்தவர்கள் அவர் உயிர் பிழைத்ததை எண்ணி ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அன்னையின் மகிமை பலராலும் பேசப்பட்டது. ஆனாலும் அவர் கால்களில் இரண்டு பாதங்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு நரம்புச் சிதைவும் ஏற்பட்டுவிட்டது.
உடனே மேட்டுப்பாளையம் அரசினர் மருத்துவ மனையில் அவரைச் சேர்த்தோம். அவர் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப ஆறு மாத காலம் ஆகும் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். உடம்பில் வேறு எந்த இடத்திலும் காயமில்லை.

(தொடர்ச்சி..16ஆம் பக்கம்)

# ஆன்மிக நாட்குறிப்பு

## 2018

| | | | | |
|---|---|---|---|---|
| 04.02.2018 | ஞாயிறு | தை | 22 | **திருவிளக்குப் பூஜை** ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 11.02.2018 | ஞாயிறு | தை | 29 | ஏகாதசி விரதம் |
| 13.02.2018 | செவ்வாய் | மாசி | 01 | பிரதோஷ விரதம் |
| 14.02.2018 | புதன் | மாசி | 02 | **மகா சிவராத்திரி** |
| 15.02.2018 | வியாழன் | மாசி | 03 | **அமாவாசை விரதம் - வேள்வி** – மேல்மருவத்தூர் |
| 19.02.2018 | திங்கள் | மாசி | 07 | சதுர்த்தி விரதம் |
| 21.02.2018 | புதன் | மாசி | 09 | ஷஷ்டி விரதம் |
| 22.02.2018 | வியாழன் | மாசி | 10 | கார்த்திகை விரதம் |
| 23.02.2018 | வெள்ளி | மாசி | 11 | அஷ்டமி |
| 24.02.2018 | சனி | மாசி | 12 | நவமி |
| 26.02.2018 | திங்கள் | மாசி | 14 | ஏகாதசி |
| 27.02.2018 | செவ்வாய் | மாசி | 15 | பிரதோஷம் |
| 01.03.2018 | வியாழன் | மாசி | 17 | **மாசி மகம்**<br>**பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 03.03.2018 | சனி | மாசி | 19 | **ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் - அவதாரத் திருநாள்** |
| 04.03.2018 | ஞாயிறு | மாசி | 20 | **திருவிளக்குப் பூஜை** ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |

## ஓம் சக்தி விளக்கின் …

(15ஆம் பக்க தொடர்ச்சி)

மருத்துவமனை சென்று பார்க்கப்போன என்னிடம் அவர் கண்ணீர் விட்டு அழுதபடிக் கூறினார்.
“எந்தப் பாதங்கள் அன்னையின் திருவிளக்கை – ஆன்மிகக்குருவின் கரங்கள் தீபாரதனை செய்த திருவிளக்கை – சித்தர் பீடத்தில் அன்னையின் வேள்விப் பூசையில் ஆசிர்வாதம் பெற்ற திருவிளக்கை – உதைத்துக்கொண்டு வந்தேனோ..அந்தப் பாதங்களைச் சீர் குலைத்துத் திருவிளக்கின் மகிமைகளை அம்மா எனக்கு உணர்த்திவிட்டாள். அவளைக் கும்பிட்டு வந்ததால் உயிரைக் காப்பாற்றி விட்டாள். விளக்கை உதைத்த பாவத்துக்குத் தண்டனையும் கொடுத்துவிட்டாள்” எனச் சொல்லி அழுதார். நாங்கள் அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தோம்.

**எல்லோருக்கும் இது ஒரு பாடம்:**
“உங்களுக்கு இப்படி ஒரு தண்டனை கொடுத்து செவ்வாடைத் தொண்டர்கள் அந்தத் திருவிளக்கின் மகிமையை நன்கு அறிந்துகொள்ள வேண்டும் எனவும் திருவிளக்கை அன்னையாக பாவித்து பக்தியோடு வழிபட வேண்டும் எனவும் அன்னை உலக மக்களுக்கு எடுத்துரைக்கிறாள். அதற்கு நீங்கள் ஒரு கருவி! கவலைப்படவேண்டாம். அம்மா உங்களை விரைவில் குணப்படுத்திவிடுவாள்!” என்று ஆறுதல் சொல்லிவிட்டுத் திரும்பினோம்.

**அவர் நலமடைய மன்றத்தில் வழிபாடு**
ஒவ்வொரு வாரமும் அவர் பாதங்கள் குணமாக வேண்டும் என்று அன்னையை வேண்டிக்கொண்டு மன்றத்தில் கூட்டு வழிபாடு செய்தோம்.

**பிராயச்சித்தம்:**
கால்கள் முற்றும் குணமடைந்த பிறகு 10 ஏழைப் பெண்மணிகளைச் சித்தர் பீடத்துக்கு அழைத்து வந்து அந்த மண்ணை மிதிக்க வைத்து ஆன்மிக குருவின் பொற்பாத கமலங்களில் விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு அந்தப் பத்து பெண்மணிகளுக்கு இலவசமாக ஓம் சக்தி விளக்கை வாங்கிக் கொடுத்து, செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேட உள்ளேன்” என்றார் அந்த அன்பர்.
ஆகவே, சக்திகளே! ஓம் சக்தி விளக்குகளை எளிதாக நினைக்க வேண்டாம். அதனை அன்னையாகவே பாவித்துப் பயபக்தியுடன் வழிபட வேண்டும்.
நம் செவ்வாடைத் தொண்டர் ஒவ்வொருவர் குடும்பங்களிலும் ஓம் சக்தி விளக்கும் காமாட்சி விளக்கும் நம் குரு நாதரின் திருவடி உள்ள படமும் வைத்து நாளும் வழிபட்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
ஓம் சக்தி.